**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

E.A.3/2022 in E.P.No.14/2012 in
O.S.No.26/2004 தேதி-29.03.2025

(P.W.1) – ராஜமணி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் தாக்கல் செய்துள்ள E.A.3/2022 மனுவில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இழப்பீடு வேண்டி தாக்கல் செய்துள்ளேன். இழப்பீடு குறித்து சிவில் நீதிமன்றத்தில் வேறு வழக்கு செல்வராஜ் மீது தாக்கல் செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. E.A.3/2022 மனுவில் எவ்வளவு இழப்பீடு வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூ.50 லட்சம் ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் E.A.3/2022 மனுவில் ரூ.50 லட்சம் இழப்பீடு என்று உள்ளதா என்றால் எனக்கு கண் கண்ணாடி இல்லாமல் வாசிக்க முடியாது. E.A.3/2022 மனுவில் உள்ள பரிகாரம் கோரியுள்ள பகுதியில் ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்கவேண்டும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். E.A.3/2022 மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டிகை சொத்தும் என்னுடைய சொத்தில்லை என்றால் சரிதான், செல்வராஜ் என்பவர் சொத்தாகும். இம்மனுவில் உள்ள பட்டிகை சொத்து குறித்து வேறு வழக்கில் செல்வராஜ்க்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டு நீதிமன்ற ஆணையர் மூலம் செல்வராஜ்க்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

2. கீழமை நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பு வரை செல்வராஜ் என்பவரின் சொத்து என் கைவசம் இல்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் வரை என் கைவசத்தில் இருந்தது என்றால் 2010 வரையாகும். 2010-லிருந்து தற்போது வரை செல்வராஜ் என்பவரின் வாரிசுதாரர்கள் கைவசத்தில் உள்ளது என்றால் தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் E.P.No.11/2009 செல்வராஜ் என்பவர் என் மீது போடப்பட்ட நிறைவேற்று மனு என்றால் நினைவுள்ளது. மேற்சொன்ன E.P.No.11/2009 வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். E.P.No.11/2009 வழக்கில் எனக்கெதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது.

( வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)